**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 -ம் நாள் புதன்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 11- ம் நாள்**

**CC. No.169 of 2024**

**(CNR No.TNVP10-00399-2024)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C. No.169/2024 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ரோஷணை காவல் நிலையம்,<br>குற்ற எண். 271/2023,<br>இதச பிரிவுகள் 341, 294(b), 506(2) |
| 3 | எதிரிகளின் விவரம் | | 1. ராமையா, வயது 45,<br>த/பெ கிருஷ்ணன்,<br>வெள்ளிமேடுபேட்டை மெயின் ரோடு,<br>தீவனூர், திண்டிவனம் வட்டம்.<br>2.காந்திமதி, வயது 37,<br>க/பெ ராமையா,<br>வெள்ளிமேடுபேட்டை மெயின் ரோடு,<br>தீவனூர், திண்டிவனம் வட்டம்.<br>3.சாரதி, வயது 23,<br>த/பெ ராமையா,<br>வெள்ளிமேடுபேட்டை மெயின் ரோடு,<br>தீவனூர், திண்டிவனம் வட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 08.07.2023 |
| 5 | முறையீடு | : | 08.07.2023 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:39:16 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | A1,A2 Anticipatory Bail. A3 Absconding | | |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 14.10.2024 | | |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 07.01.2023 | | |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 12.12.2025 | 13.02.2026 |
| | | | PW-2 | 12.12.2025, 07.02.2026 | 13.02.2026 |
| | | | PW-3 | 07.02.2026 | 13.02.2026 |
| | | | PW-4 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-5 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | PW-6 | 11.03.2026 | 11.03.2026 |
| 11 | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) - ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 13.03.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.03.25 16:39:23 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 506(2) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 14.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 17.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஜயன், M.A., B.L, அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

### 1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-

கடந்த 08.07.2023 அன்று காலை 11.30 மணிக்கு ரோஷணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தீவனூர் கிராம எல்லையில் உள்ள வாதியான சாட்சி -1 ஆனவரின் விவசாய நிலத்திற்கு செல்லும் பாதையில் சாட்சி -1 ஆனவர் தனது விவசாய நிலத்தில் உழுவதற்காக சாட்சி -2 ஆனவரின் டிராக்டரை வாடகைக்கு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:39:28 +0530

அழைத்துக்கொண்டு சாட்சி - 2 ஆனவர் ஓட்டிக்கொண்டு அவரது நண்பரான சாட்சி -3 ஆனவர் சாட்சி-2 ன் உதவிக்காக டிராக்டரில் அமர்ந்து கொண்டு சென்றபோது டிராக்டரை எதிரிகள் மூவரும் வழிமறித்து டேய் தேவிடியா பசங்களா உங்களுக்கு என்னடா இங்க வேலை என்று ஆபாசமாகதிட்டியும், ஏற்கனவே தாங்கள் உங்களை மிட்டியும் பயப்படாமல் இந்த வழியை பயன்படுத்துகிறீர்கள் என்று சொல்லி எதிரிகள் மூவரும் டிராக்டர் முன் படுத்துக்கொண்டு வழிவிடாமல் மறித்துவிட்டு இதை மீறி நீங்கள் சென்றால் உங்க டிராக்டரையும் உங்களையும் இங்கேயே பெட்ரோல் ஊற்றி எரித்துவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) ன்படி ரோஷணை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது இதச பிரிவுகள் இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230- BNSS - ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:39:34 +0530

விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

- ➔ பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா1. சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ பார்வை சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவு அளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(b)- BNSS -ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.25 16:39:39 +0530

**8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இதச பிரிவுகள், 341, 294(b), 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10.அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன்வைக்கப்படவில்லை.

11.எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இரு தரப்பினர் இடையே சொத்து சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. சம்பவ சமயத்தில் மூன்றாவது எதிரி கல்லூரியில் இருந்துள்ளார். சம்பவம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் புகார்தாரரின் நண்பர்கள், தனிப்பட்ட நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. புகாரில் தேதி, நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.25 16:39:54 +0530

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு. நித்திய பிரகாஷ்** அவரது சாட்சியத்தில் கடந்த 8/7/2023 காலை 11 மணி அளவில் தனது வயலை உழுவதற்காக தானும், டிராக்டர் ஓட்டுநர் தமிழ்மணியும், விஜயகுமாரும் சென்றதாகவும், அப்பொழுது நிலத்தின் வழி பாதையில் எதிரி காந்திமதி அவராகவே அவரது முடி மற்றும் சேலையை கலைத்துவிட்டு டிராக்டர் முன்பாக படுத்து கொண்டு பிரச்சனை செய்தார் எனவும், அங்கு வந்த 1வது எதிரியும், அவரது மகனும் மூன்று நபரும் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை பார்த்து போங்கடா தேவிடியா பசங்களா இங்க வந்தா பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விடுவேன் என மிரட்டினார்கள் எனவும், இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்

13. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 தான் பூதேரியில் குடியிருப்பதாகவும், தனக்கு சொந்தமான நிலம் தீவனூரில் உள்ளதாகவும், தங்கள் ஊரிலிருந்து சுமார் 1 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும் எனவும், தனக்கும், எதிரிகளுக்கும் முன் விரோதம் இல்லை எனவும், புகாரில் முன் விரோதம் இருப்பதாக சொல்லவில்லை எனவும், இவ்வழக்கிற்கு முன்பாக எதிரிகள் மீது புகார் கொடுத்து சி. எஸ்.ஆர். எண். 46/2023 பதிவு செய்யப்பட்டதாகவும், சம்பவம் நிலத்துக்கு செல்லும் வழியில் நடந்ததாகவும், அந்த நிலம் மணிவண்ணனுக்கு சொந்தமானது எனவும், புகாரில் எதிரி ராமையா விசாரணைக்கு அழைத்தும் வரவில்லை என தான் கொடுக்கவில்லை எனவும், மூன்று எதிரிகளும் ஆபாசமாக திட்டி அடித்தார்கள்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:40:01 +0530

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

14. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு. தமிழ்மணி** அவரது சாட்சியத்தில் கடந்த 8/7/2023 அன்று அ.சா.1 டிராக்டரை அவர் நிலத்திற்கு உழுவதற்காக எடுத்து வர சொன்னார் எனவும், காலை 11:30 மணியளவில் அவளது கழனியில் டிராக்டரை ஓட்டிக் கொண்டிருந்தபோது, அ.சா.1-ம், விஜயகுமாரும் இருந்தார்கள் எனவும், ஒரு பெண் டிராக்டரை வழிமறித்து கீழே படுத்துக்கொண்டார் எனவும், அசிங்கமாக பேசி வண்டியை பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விடுவதாக சொல்லி அடிக்க வந்தார் எனவும், அவருடன் இரண்டு நபர்கள் இருந்ததாகவும், அவர்கள் எதிரிகள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.2 எதிரிகள் வழிப்பாதையில் வழியை மறித்தார்கள் எனவும், சம்பவ சமயத்தில் நாங்கள் மூன்று பேரும் எதிர் தரப்பில் மூன்று நபர்களும் இருந்ததாகவும், கழனி பாதையில் காந்திமதி வழி மறித்தார் எனவும், சுமார் 1 - 2 அடி தூரத்தில் வழி மறித்தார் எனவும், முதலில் ராமையா திட்டினார் எனவும், அதன் பிறகு காந்திமதி, அதன்பிறகு 5 நிமிடம் கழித்து அவரது மகன் மிரட்டினார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

15. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு. விஜயகுமார்** அவர்களது சாட்சியத்தில் கடந்த 08.07.2023 பகல் 11:30 மணி அளவில் உழவு செய்வதற்காக டிராக்டர் எடுத்து வந்தார்கள் எனவும், தான் உதவிக்காக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:40:07 +0530

சென்றபோது இரண்டாவது எதிரி யாரை கேட்டு நிலத்தை உழ வந்தீர்கள் எனக் கேட்டு டிராக்டரின் எதிரில் படுத்துக்கொண்டார் எனவும், 1,3 எதிரிகள் அங்கு வந்து பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவதாக மிரட்டினார்கள் எனவும், பிரச்சனை வேண்டாம் என சொல்லி அ.சா.5 வந்து வண்டியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

16. அ.சா.3 குறுக்கு விசாரணையில் தான் அ.சா.2-உடன் செல்லவில்லை எனவும், தான் புல் செடி பறிக்க கழனியில் இருந்து கூப்பிட்டார்கள் எனவும், காலை 7 மணிக்கே சென்று பகல் 12 மணி வரை வேலை செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். காந்திமதி திட்டினார் எனவும், அதன் பிறகு 10 நிமிடம் கழித்து ராமையாவும் அவரது மகனும் வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

17. அ.சா.1 குடும்பத்திற்கும், எதிரிகளுக்கும் இடையே நில சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. சம்பவம் குறித்து எதிரிடை வழக்கு உள்ளதாக புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். கடந்த 08.07.2023 காலை 11:30 மணி அளவில் அ.சா.1 அவரது நிலத்தை உழுவதற்காக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் டிராக்டர் எடுத்துக்கொண்டு வழி பாதையில் சென்றபோது எதிரிகள் வழிமறித்து, தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டினார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 ன் நிலத்தின் வழி பாதையில் செல்லும்போது சம்பவம்

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.25 16:40:17 +0530

நடந்ததாகவும், அ.சா.1 நிலத்தில் இருந்தபோது சம்பவம் நடந்ததாக அ.சா.2, அ.சா.3 ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். அசிங்கமாக திட்டியதாக குறிப்பிட்டுள்ள போதிலும், என்ன வார்த்தை என அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சொல்லவில்லை. யார் வழியை மறித்தார்கள், யார் முதலில் திட்டினார்கள் என்பது குறித்து அ.சா.1 முதல்அ.சா.3 முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். கழனி இருந்த பகுதியில் காலை 11:30 மணியளவில் சம்பவம் நடந்துள்ள நிலையில், மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவ இடத்திற்கு அருகில் கழனி உள்ள நாராயணன், முனுசாமி ஆகியோர் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. புகாரில் ஏற்கனவே அ.சா.1 எதிரிகள் மீது புகார் கொடுத்து சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், வழக்கின் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் 08.07.2023 என தேதியிடப்பட்டுள்ளது. இதனை 10.07.2023 காலை 15.20 மணிக்கு பெற்றதாகவும் அன்றைய தினமே காலை 20.00 மணிக்கு வழக்கு பதிவு செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் தரப்பட்ட தேதி, நேரம் ஆகியவை நான்கு இடங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. புகாரில் ராமையா விசாரணைக்கு அழைத்தும் விசாரணைக்கு வராமல் உள்ளார் என்ற வாசகம் தான் கொடுக்கவில்லை என அ.சா.1 குறிப்பிட்டுள்ளார். எனினும் மேற்படி வாசகம் புகாரில் உள்ளது. இரு தரப்பினர் இடையே ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையிலும், எதிரிடை வழக்கு உள்ள நிலையிலும், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளினாலும், சம்பவம் குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.25 16:40:26 +0530

18. பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.4 திரு. கிருஷ்ணன்** அவரது சாட்சியத்தில் சுமார் 2 மாதத்திற்கு முன்னதாக ஒரு நாள் பகல் 11 மணியளவில் பூதேரியில் உள்ள தனது கழனியில் ரோஷணை போலீசார் வந்து மேப் போட்டு கையொப்பம் பெற்றார்கள் எனவும், தானும், தனது தம்பி ஆறுமுகம், மகசரில் கையொப்பம் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.4 வழக்கு சொத்து தீவனூரில் உள்ளதாகவும், தான் தீவனூர் செல்லவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான **அ.சா.5 திரு.ஆறுமுகம்** அவரது சாட்சியத்தில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் மாலை தான் கழனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, ரோஷனை போலீசார் வந்து கையொப்பம் செய்து கேட்டபோது தானும், தனது அண்ணன் கிருஷ்ணனும் கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். தான் தீவனூரில் தனது கழனியில் வேலை செய்ததாகவும், அருகில் உள்ள மெயின் ரோட்டில் கையொப்பம் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.4, அ.சா.5 ஆகியோர் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

19. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.6 திரு. ராஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர்** அவருடைய சாட்சியத்தில் கடந்த 9/7/2023 இரவு 8 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சி.எஸ்.ஆர்.நெ.55/2023 பதிவு செய்ததாகவும், பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். 10.07.2023 காலை 10 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:40:36 +0530

முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார். 1, 2 எதிரிகள் முன்பிணை பெற்றுள்ளனர். மூன்றாவது எதிரியை தலைமறைவாகியுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் 341, 294(b), 506(2) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.6 எதிரிடை வழக்கு உள்ளதாகவும், அதிலும் தான் புலன் விசாரணை அதிகாரி எனவும், இரு தரப்பிலும் விசாரித்து பார்த்ததில் இரு தரப்பினர் மீதும் தவறு உள்ளதாகவும், இரு தரப்பினர் இடையே உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், புகாரில் தேதி, நேரம், திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், மாலை என்பதற்கு பதிலாக காலை என கை தவறுதலாக எழுதப்பட்டுள்ளதாகவும், சம்பவ சமயத்தில் அ.சா.1 நண்பர் எடுத்து வந்த டிராக்டர் எந்த வகையானது, பதிவு எண் குறித்து சொல்லவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

20. பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் குறித்தும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 முதல் அ.சா.3 சம்பவம் குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டியதாக பொதுவாக குறிப்பிட்டுள்ள நிலையில், எந்த எதிரி எந்த குற்ற செயலில் ஈடுபட்டார் என குறிப்பிட்டு சாட்சியம் முன் வைக்கப்படவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:40:45 +0530

புகார்தாரரான அ.சா.1 க்கு புகாரில் உள்ள வாசகம் பற்றி தெரியவில்லை. புகாரில் புகார் பெறப்பட்ட தேதி, நேரம் குறித்து பல்வேறு இடங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பினர் இடையே நில சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரிகள் அ.சா.1-யை அழைத்து வந்து டிராக்டரை வழிமறித்து தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள்படியாக இதச பிரிவுகள் 341, 294(b),506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**22. இறுதியாக, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 506(2) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) – BNSS - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:40:52 +0530

23. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 -ம் புதன்கிழமை -2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:40:59 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.நித்தியபிரகாஷ் | பாதிக்கப்பட்டசாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.தமிழ்மணி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.விஜயகுமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.கிருஷ்ணன் | பார்வை மகர் சாட்சி |
| அ.சா.5 | திரு.ஆறுமுகம் | பார்வை மகர் சாட்சி |
| அ.சா.6 | திரு.ராஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| **அ.சா.ஆ. எண்கள்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரம்** | **ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.07.2023 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ------- | பார்வை மகசரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் | அ.சா. 5 |
| அ.சா.ஆ.3 | 09.07.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | 10.07.2023 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 10.07.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.25 16:41:08 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.